## தேயிலை ஆராய்ச்சிச் சபை - 2014

தேயிலை ஆராய்ச்சிச் சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1993 இன் 52 ஆம் இலக்க தேயிலை ஆராய்ச்சி சபை அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளிற்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தின் பொறுப்புகள்

இந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள்போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, தேயிலை ஆராய்ச்சிச் சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 07**

(i) சொத்துக்கள் காலரீதியாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டு சொத்துக்களின் நியாயமான பெறுமதி கணக்குகளில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், நீண்டகாலமாக மீள் மதிப்பீடு செய்யாமல் முன்கொண்டு வரப்பட்டு காணப்பட்ட தேறிய பெறுமதி ரூபா 413,219,236 தொகையான காணி, கட்டிடங்கள், இயந்திர உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் போன்ற நிலையான சொத்துக்கள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) காணி மற்றும் கட்டிடங்கள் வெவ்வேறாக வகைப்படுத்த வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் அவ்வாறான வகைப்படுத்தல் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் கட்டிடத்திற்காக பெறுமானத்தேய்வு பெறுமதியின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் - 09**

(i) இருப்பின் கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதியில் குறைந்த பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பௌதீக இருப்பு மெய்மையாய்வின் போது காணப்பட்ட ரூபா 210,408 கிரயத்திலான மருந்துப் பொருள் இருப்பு மீளாய்வாண்டின் போது பௌதீக ரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்படாமல் அப்பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக களஞ்சியத்தில் காணப்படுகின்ற தற்போது பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத ரூபா 247,800 பெறுமதியான மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் ரூபா 232,713 பெறுமதியான மின் உதிரிப்பாகங்கள் இருப்பொன்று மீளாய்வாண்டின் இறுதி இருப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஏதேனும் குறிப்பான கணக்கு நடவடிக்கையொன்றிற்காக நடவடிக்கை எடுக்க வேண்டிய முறை தொடர்பாக நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்காக பயன்படுத்துகின்ற கணக்கீட்டு முறைமையொன்று மேவுகை செய்யப்படா விட்டால் அப்போது மிகவும் பொருத்தமன முறைமையின் (Best Practice) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததுடன், அது தொடர்பாக குறிப்பிடப்பட்டு கணக்கீட்டுக் கொள்கையொன்று தயாரிக்கப்பட்டு அது பின்பற்றப்பட வேண்டிய போதிலும், சபையினால் பின்வரும் சொத்துக்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) மீளாய்வாண்டின் இறுதியிலான நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்ட பெறுமதி ரூபா 2,404,163 பெறுமதியான கற்பனைச் சொத்துக்கள் காலக்கழிவு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டமை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்ட ரூபா 164,388,963 கிரயத்திலான தேயிலை பயிர்ச்செய்கை முதிர்ச்சியடைந்த (Mature) முதிர்ச்சியடையாத (Mature) என வகைப்படுத்தப்பட்டு தனித்தனியாக இனங்காணல்

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாதிருந்த தேயிலைக் கன்று நாற்றுமேடை நிர்மாணத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 272,275 தொகையான ஜீ.ஐ குழாய்களின் பெறுமதி நடைமுறை வேலையின் காண்பிக்காமல் நிலையான சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2006 சனவரியிலிருந்து 2012 மே 30 வரை சபையின பதவியணியினருக்கு சம்பளத்துடன் செலுத்தப்பட்டிருந்த படிகள் அடிப்படையில் சபையினால் செலுத்த வேண்டிய ரூபா 20.79 மில்லியன் தொகை ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு, சபையினால் செயற்படுத்தப்படுகின்ற பதவியணியினர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. அத்தொகை தொடர்பாக கணக்குகளில் நிதிஏற்பாடும் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், அப்படிகள் அடிப்படையில் கழிக்கப்பட வேண்டிய பதவியணியினரின் பங்களிப்பும் ஊழியர் சம்பளங்களிலிருந்து கழிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தேயிலை ஆராய்ச்சி சபையின் மூலம் 1979 முதல் 1982 வரையான Lowery Tea Processing ஆராய்ச்சி செயற்திட்டத்தின் மூலம் இலங்கையில் தேயிலை தயாரித்தல் செயற்பாட்டின் பொருத்தப்பாட்டினை பரீட்சிப்பதற்கான செயற்திட்டத்திற்காக ரூபா 4,142,173 தொகை செலவிடப்பட்டிருந்தது. இச்செயற்திட்டமானது இலங்கையில் தேயிலை உற்பத்திக்காக பொருத்தமற்றிருந்ததன் காரணமாக கைவிடப்பட்டிருந்த போதிலும், 1982 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு இறுதிவரை நடைமுறை வேலையாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிறுவகத்தின் ஒவ்வொரு ஆராய்ச்சி பிரிவுக்கும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இரசாயனப் பொருள் இருப்புக்களில் மீளாய்வாண்டில் இறுதியில் எஞ்சியிருந்த இருப்புக்கள் மீளாய்வாண்டின் இறுதியிலான இருப்பு மீதிகளுக்கு உள்ளடக்கப்படாதிருந்ததுடன், அவற்றின் பெறுமதி தொடர்பான தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் Soil Plant Nutrition மற்றும் Agronomy பிரிவில் ஒவ்வொரு இரசாயன பொருட்களுக்காக பின்காட் அல்லது

களஞ்சிய பேரேடு முறையாக பேணப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டின் இறுதியிலான பௌதீக இருப்பு மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

மீளாய்வாண்டின் இறுதியில் நிலையான சொத்துக்கள் பட்டோலையில் காணப்படும் ரூபா 973,500,665 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள் உரிய கணக்குகளுடன் ஒப்பிடும் போது ரூபா 158,196,303 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. நீண்டகாலமாக கணக்குகளில் முன்கொண்டு வரப்பட்டு காணப்பட்ட இவ்வேறுபாட்டை இனங்கண்டு அவற்றை சரிசெய்வதற்கு சபையினால் 2014 திசெம்பர் 31 இல் ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நிலையான சொத்துக் கணக்கில் காண்பிக்கப்பட்ட ரூபா 662,077 பெறுமதியான சொத்துக்கள் கொழும்பு ஆய்வுகூடத்தில் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், சபைக்குரிய ஆய்வுகூடமொன்று கொழும்பில் இல்லையென அவதானிக்கப்பட்டமையால் அப்பெறுமதியை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றிக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 177(1) | நாளாந்த சேகரிப்புகள் நாளாந்தம் அல்லது இயலுமான வரை வங்கியில் இடப்பட வேண்டிய போதிலும், ஹந்தான, மத்துகம மற்றும் தெனியாய உப அலுவலகங்களில் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் முறையே ரூபா 755,355 தொகை, ரூபா 16,275 தொகை மற்றும் ரூபா 62,373 தொகை அத்தினங்களிலிலேயே செலவினங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) | 11 சந்தர்ப்பங்களில் ரூபா 20,000 எல்லையை மிகைத்து முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (iii) நிதிப்பிரமாணம் 387 | காசோலை மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து கொடுப்பனவுகளிற்காக தமது வங்கி மீதி போதுமானதா என கொடுப்பனவு செய்யும் உத்தியோகத்தரால் எந்நேரமும் ஆராய்ந்து பார்க்க வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யாத காரணத்தினால் மீளாய்வாண்டின் இறுதியில் சபையின் இரத்தினபுரி விரிவாக்கல் நிலையத்திற்குரிய வங்கிக் கணக்கில் ரூபா 21,237 ஆன மேலதிகப் பற்று மீதியொன்று உருவாகியிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 1978 திசெம்பர் 19 ஆம்திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | முறைப்படி நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்படாதிருந்ததுடன், சபைக்குரிய காணி நிலையான சொத்துப் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் மோட்டார் வாகனங்களின் எரிபொருள் பயன்பாடு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 36.251 மில்லியன் பற்றாக்குறையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 23.690 மில்லியன் ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 12.561 மில்லியனான வீழ்ச்சியொன்று காணப்பட்டது. செயற்பாட்டு செலவினங்களின் அதிகரிப்பும் சென் ஜோகிம் தொழிற்சாலையின் நட்டம் அதிகரித்தமையும் அதற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

### 3.2. பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சபையினால் முகாமை செய்யப்படும் சென் கூம்பஸ் தோட்டம் மற்றும் சென் ஜோகிம் ஆகிய இரண்டு தோட்டங்களின் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் முறையே ரூபா 4.745 மில்லியன் தேறிய இலாபமொன்றும் ரூபா 13.656 மில்லியனான தேறிய நட்டமொன்றாகவும் இருந்ததுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே ரூபா 1.693 மில்லியன் மற்றும் ரூபா 12.577 மில்லியன் வீழ்ச்சியொன்று காணப்படுகின்றது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு தோட்டங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகளின் தேயிலை விற்பனை அளவு மற்றும் உற்பத்தி கிரயம் தொடர்பான விபரங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளது.

| | **சென் கூம்பஸ் தோட்டம்** | | **சென் ஜோகிம் தோட்டம்** | |
|---|---|---|---|---|
| | **2014** | **2013** | **2014** | **2013** |
| தேயிலை விற்பனைகள் (கிலோ கிராம்) | 369,706 | 374,098 | 346,446 | 297,899 |
| விற்பனைக் கிரயம் (கிலோ கிராமொன்றிற்கு ரூபா) | 500.04 | 473.21 | 457.61 | 455.89 |
| ஹெக்டேயருக்கு உழைப்பு (கிலோ கிராம்) | 2,400 | 2,400 | 1,532 | 1,746 |
| சராசரி தேறிய விற்பனை (கிலோ கிராமொன்றிற்கு ரூபா) | 493.97 | 485.05 | 432.85 | 458.62 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் சென் கூம்பஸ் தோட்டத்தின் விற்பனை அளவு 4,392 கிலோ கிராம்களால் குறைவடைந்திருந்த போதிலும், சராசரி தேறிய விற்பனை விலை 1.84 சதவீத்தினால் அதிகரித்த

காரணத்தினால் விற்பனைப் பெறுமதி ரூபா 1.143 மில்லியனால் அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும் ஏனைய உற்பத்திக் கிரயம் 5.67 சதவீதத்தினால் அதிகரித்த காரணத்தினால் தொழிற்சாலையின் இலாபம் குறைவடைந்திருந்தது.

(ii) தொழிற்சாலைகளின் கணக்குகளின் பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது சென் ஜோகிம் தோட்டத்தின் விற்பனை அளவு 48,547 கிலோ கிராம் அதிகரித்திருந்த போதிலும் விற்பனைக் கிரயம் அதிகரிப்பு மற்றும் விற்பனைகளின் குறைவு இருந்தமை காரணமாக செயற்பாட்டு நட்டம் ரூபா 11.185 மில்லியனால் அதிகரித்திருந்தது. அங்கு அமைந்துள்ள இறப்பர் தோட்டத்திலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 0.01 மில்லியன் நட்டமொன்று ஏற்பட்டிருந்ததுடன், அது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 1.322 மில்லியனால் நட்டம் அதிகரித்திருந்தது.

(iii) பெற்றுக்காள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம், சென் கூம்பஸ் தோட்டத்தினதும் சென் ஜோகிம் தோட்டத்தினதும் இயந்திரங்களின் இயலளவு முறையே ஒரு நாளிற்கு பச்சை தேயிலை 10,000 கிலோகிராம்கள் மற்றும் 15,000 கிலோகிராம்களாக இருந்தன. எவ்வாறாயினும், ஒரு நாளிற்கு அவ் இயந்திரங்களின் உள்ளவாறான சராசரி பயன்பாடு முறையே 4,500 கிலோகிராம்கள் (45.0 சதவீதம்) மற்றும் 4,600 கிலோகிராம்கள் (30.67 சதவீதம்) ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) சென் ஜோகிம் தோட்டத்திற்குரிய காணியில் நெல், தேயிலை, இறப்பர், தென்னை மற்றும் ஏனைய பயிர்கள் பயிர்செய்கை பண்ணப்பட்டிருந்த போதிலும், 2012 இன் ஆண்டறிக்கையின் பிரகாரம் 8.74 ஹெக்டேயர் வயலும் 3.89 ஹெக்டேயர் தென்னந் தோட்டங்களிலிருந்தும் கிடைக்கும் வருமானத்தையும் சபைக்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இறப்பர் மற்றும் தென்னந் தோட்டங்களில் உள்ள மரங்களின் அளவு கணக்கிடப்பட்டு பதிவேடுகளுக்கு உட்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1. செயலாற்றல்

**(அ) ஆராய்ச்சி நடவடிக்கைகள்**

செயலாற்றல் அறிக்கைகளின் பிரகாரம் சபையின் ஆராய்ச்சி செயற்திட்டங்களின் அதிகளவில் நடைமுறை வேலையாக நீண்டகால செயற்திட்டங்களாக இருப்பதால் செயல்நடவடிக்கைத் திட்டம் பௌதீக இலக்குகளாக அல்லாமல் நிதி இலக்குகளுக்காக மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், பௌதீக இலக்குகள் நிறைவேற்றுவதை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதியில் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக 15 நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மதிப்பீட்டுத் தொகையில் மீண்டுவரும் செலவினத்திற்காக 97.71 சதவீதமும் மூலதனச் செலவினத்திற்காக 48.99 சதவீதமும் செலவிடப்பட்டிருந்தது. 7 நிகழ்ச்சித்திட்டங்களின் மூலதனச் செலவினம் மதிப்பீட்டுத் தொகையை விட 50 சதவீதத்தை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன், 5 நிகழ்ச்சித்திட்டங்களின் மீண்டெழும் செலவினம் ரூபா 9.47 மில்லியனால் மதிப்பிடப்பட்ட தொகையை விட விஞ்சி செலவிடப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

**(ஆ) ஏனைய ஆராய்ச்சி செயற்திட்டங்கள்**

(i) சிறுநில தேயிலை உடமையாளர்களின் தேயிலை கொழுந்து பறிக்கும் போது தோன்றும் சிக்கல்களுக்கு தீர்வொன்றாக கொழுந்து பறிக்கும் இயந்திரங்கள் மற்றும் அதற்குரிய உபகரணங்களை சிறுநில தேயிலை உடமையாளர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கும் பிரபல்யப்படுத்துவதற்காகவும் சபையினால் விசேட செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 100 மில்லியன் திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

இச்செயற்திட்டத்திற்காக 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 48 மில்லியன் கிடைக்கப்பெற்றிருந்ததுடன், பெருந்தோட்ட அமைச்சின் வழிகாட்டலின் கீழ் சிறு தேயிலை தோட்ட அபிவிருத்தி அதிகாரசபை, தனியார் தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்களின் சங்கம், சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களின் சங்கம் மற்றும் இலங்கை தேயிலை சபை ஆகிய நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் செயற்படுத்தப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டின் போது சிறுநில தேயிலை உடமையாளர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 200 கொழுந்து பறிக்கும் இயந்திரங்கள், 50 நிலத்தை தோண்டும் இயந்திரங்கள், 100 கவாத்து வெட்டும் இயந்திரங்கள் மற்றும் அதற்குரிய உபகரணங்கள் என்பவற்றை சிறு நில தேயிலை உடமையாளர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப் பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இதற்காக சபையால் ரூபா 43.12 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(ii) தனியார் நிறுவனமொன்றின் தேவைப்பாட்டின் பேரில் கழிவுத் தேயிலையைப் பயன்படுத்தி நறுமணமுள்ள காயக்கட்டுகளை உற்பத்தி செய்வதற்காக சபையினால் நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்கான சகல செலவினங்களும் குறித்த தனியார் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இத்தொழில்நுட்பத்தை கையளிப்பதற்காக 2 சதவீதம் கழிவொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு குறித்த நிறுவனத்துடன், உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்த போதிலும் அதன் செயன்முன்னேற்றம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சென் கும்பஸ் தொழிற்சாலையில் 03 கொழுந்து உலர்த்தும் இயந்திரங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி வரையிலும் அதில் இரண்டு இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன. இதன் காரணமாக தற்போது பயன்பாட்டில் காணப்படும் இயந்திரம் 24 மணி நேரமும் தொடரச்சியாக செயற்படுவதனால் அவ்வியந்திரம் பழுதடைந்தால் தேயிலை தொழிற்சாலையின் உற்பத்தி செயற்பாடு முழுமையாக இடைநிறுத்தப்படக்கூடிய இடரொன்று ஏற்படக்கூடுமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) Water Still Unit ஒன்று கொள்வனவு செய்வதற்காக 2011 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 110,124 தொகையான முற்பணத் தொகையொன்று தனியார் நிறுவனமொன்றுக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டின் போது அந்நிறுவனம் மூடப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டமையால் அப்பெறுமதியை உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு சபையினால் 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சென் ஜோகிம் தோட்டத்திற்குரிய 05 ஹெக்டேயர் அளவிலான காணி 25 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலப்பகுதியிலிருந்து வெளித்தரப்பினரால் பலவந்தமாக ஆக்கிரமிக்கப்பட்டிருந்ததுடன் அந்நபர்களை அகற்றுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 900,000 மதிப்பிடப்பட்ட தொகைக்கு மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த மீள் நிர்மாண மற்றும் அபிவிருத்தி தேயிலை தகவல் நிலையம் கணக்காய்வு திகதியான 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) 2013 ஆம் ஆண்டின் போது தோட்டத் தொழிலாளர்களின் வீடுகளுக்கு கூரையிடுவதற்காக ரூபா 462,280 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த கூரைத்தகடு இருப்பொன்று கணக்காய்வு திகதியான 2015 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் குறித்த செயற்பாடுகளுக்காக பயன்படுத்தாமல் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஊ) சபையின் லெம்லியர் தோட்டத்திற்குரிய காணி மற்றும் தொழிற்சாலை 50 வருட காலத்திற்காக ரூபா 600,000 வருடாந்த வாடகைக்கு 2003 யூலை 16 ஆந் திகதி தனியார் தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்துடன், குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் அரசின் விலை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் கீழ் ஒவ்வொரு 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை குத்தகை வாடகை திருத்தம் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும் மீளாய்வாண்டு இறுதி வரை குத்தகை வாடகை திருத்தம் செய்வதற்கு சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன், அக்காணி மற்றும் தொழிற்சாலையை மீளக் கையேற்பதற்காக வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது 11 சந்தர்ப்பங்களில் கூறுவிலை கோராமல் ரூபா 599,090 தொகை செலவிடப்பட்டு தனியார் நிறுவனமொன்றிடமிருந்து மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பபாக பௌதீக பரிசோதனையின் போது அந்நிறுவனம் மோட்டார் வாகன பழுதுபார்ப்புக்களை மாத்திரம் மேற்கொள்வதாகவும் சபைக்கு இடைத்தரகராக மோட்டார் வாகன உதிரிப்பாகங்களை வழங்கும் நிறுவனமொன்றாக அவதானிக்கப்பட்டது. மேலும் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கி நடாத்திச் செல்லப்படும் முழு அளவிலான கராஜ் ஒன்று நிறுவனத்திடம் காணப்பட்ட போதிலும், கணக்காய்வு திகதியான 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி உள்ளவாறு 03 வாகனங்களை பழுதுபார்ப்பதற்காக அந்நிறுவனத்தின் கராஜில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) சபையினால் நிர்வகிக்கப்படும் வலஹன்துவ காணியின் அளவு 5.6 ஹெக்டேயராக இனங்காணப்பட்டிருந்த போதிலும், அதன் உரித்து கையேற்கப்படாதிருந்ததுடன், அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுமிருக்கவில்லை.

இக்காணி அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் மூலம் கையேற்கப்பட்ட சொத்தொன்றாக இருந்ததுடன், அதனை குறித்த தரப்பினருக்கு மீண்டும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், 2015 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டு உள்ளதாக இது தொடர்பாக தலைவர் எனக்கு அறிவித்திருந்தார்.

(ஐ) இரத்தினபுரி ஆராய்ச்சி ஆலோசனை மற்றும் விரிவாக்கல் நிலையத்தின் தொழில்நுட்ப பிரிவின் வேலைப்பிரிவில் மீளாய்வாண்டின் யூலை மாதத்தில் சபையின் உயர்மட்ட உத்தியோகத்தரொருவரின் சொந்த வீட்டிற்காக பாரியளவிலான நுழைவாயிலொன்று உற்பத்தி செய்யப்பட்டிருந்ததாக அவானிக்கப்பட்டது.

## 4.3 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீர் சுத்திகரிப்பு முறைமையை மேம்படுத்துவதற்காகவும் Agronomy பிரிவின் வேலி நிர்மாணித்திற்காகவும் செலவிடப்பட்ட முறையே ரூபா 190,000 தொகையும் ரூபா 143,130 தொகையும் நடைமுறை வேலையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதியான 2015 மார்ச் 31 ஆந் திகதி வரையிலும் அச்செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மேற்குறித்த நீர் சுத்திகரிப்பு முறைமையை மேம்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் பெப்ரவரி மாதத்தின் போது ரூபா 5

மில்லியன் திறைசேரியிடமிருந்து கிடைக்கப் பெற்றிருந்த போதிலும், அந்நடவடிக்கைகள் நிறைவேற்றப்படாததன் காரணமாக அத்தொகை மீளாய்வாண்டின் இறுதி வரை விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நிர்மாணங்கள் மற்றும் கொள்வனவு நடவடிக்கைகளுக்காக கிடைக்கப்பெற்றிருந்த மூலதன பங்களிப்பில் ரூபா 9,980,000 தொகை திட்டமிடப்பட்டதன் பிரகாரம் உரிய கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை காரணமாக அத்தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது.

(இ) மண் ஆராய்ச்சி நடவடிக்கைகளிற்காக 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் மிதைல் புரோமைட் (Me Br) செயற்திட்டத்திலிருந்து ரூபா 8,643,051 தொகை கிடைக்கப்பெற்றிருந்ததுடன், அச்செயற்திட்டத்தின் சேவை ஒப்பந்தக்காலம் 2010 மார்ச் 10 இல் உள்ளவாறு முடிவடைந்திருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 913,747 தொகையொன்று குறித்த செயற்திட்டத்தின் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

**4.5 பதவியணியினர் நிர்வாகம்**

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 443 ஆகவும் உள்ளவாறான பதவியணியனர் 360 ஆகவும் இருந்தது. அத்திகதியில் 175 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அங்கீகரிக்கப்படாத ஊழியர்கள் 92 ஆக இருந்தனர்.

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களுக்கிடையே நிறைவேற்று மட்டத்தில் 39 உத்தியோகத்தர்களும், 46 தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும், 13 விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் உட்பட நிறைவேற்று தரமல்லாத 100 உத்தியோகத்தர்களும் காணப்பட்டனர்.

(ஆ) சபையில் நிலவும் 10 வெற்றிடங்களுக்காக மீளாய்வாண்டில் ரூபா 956,614 தொகை செலவு செய்து பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போதிலும், அப்பதவிகளுக்காக கணக்காய்வு திகதியான 2015 மார்ச் 30 ஆந் திகதி வரையிலும் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் தற்காலிகமாக அல்லது அமைய அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டு அதுவரை சேவையிலீடுபடுத்தப்பட்டிருந்த 112 ஊழியர்களுக்கு (ஆரம்ப தரத்தில் 105 ஊழியர்களுக்கும் 07 முகாமைத்துவ உதவியாளர்களுக்கும்) 2014 ஒக்தோபர் 24 ஆந் திகதியிலிருந்து அமுலாகும் வகையில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது. இந்த ஆட்சேர்ப்புக் காரணமாக அப்பதவியணியில் 91 பேர் மிகையாக இருந்தனர். அதன் பிரகாரம் ஒரு ஊழியருக்கு மாதமொன்றுக்கு ரூபா 34,278 (படிகள் உட்பட) வீதம் ரூபா 3,119,298 தொகை பதவியணியினரில் அங்கீகரிக்கப்படாத 91 சாதாரண தொழிலாளர் பதவிகளுக்காக சம்பளமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் ஆரம்பத் தரத்தில் பதவிகளை நிரந்தரமாக்குவதற்காக குறைந்தது தரம் 8 / ஆண்டு 9 சித்தியடைந்திருக்க வேண்டுமென மேற்குறித்த சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அத்தகைமைகளுக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த கல்விச் சான்றிதழ்களின் சரியான தன்மையை சபையினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான வரைவு ஆண்டறிக்கை 2015 யூன் 30 ஆம் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 தீர்வு செய்யப்படாத கணக்காய்வுப் பந்திகள்

(அ) பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் மற்றும் பிராந்திய அலுவலகங்களின் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களை பராமரிப்பதற்காக மாதாந்த ஊழிய கொடுப்பனவினை மீளளிப்பதற்காக 2007 மே 24 ஆந் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. இத்தொழிலாளர் படிகள் நாளாந்த தொழிலாளர் சம்பளத்திற்கு உற்பத்தி உபகாரப் படிகள், மேலதிகநேர மற்றும் வருகைக் கொடுப்பனவு வேலை என்பன சேர்க்கப்பட்டு கணிப்பிடப்பட்டிருந்ததுடன் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் 13 உத்தியோகத்தர்களுக்காக முறையே 2,717,945 தொகையும் ரூபா 2,734,295 தொகை சம்பளமாக மீளளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இதற்காக வரிசை அமைச்சினதும் திறைசேரியினதும் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாதிருந்ததுடன், 2014 நவம்பர் 19 ஆந் திகதிய பொது முயற்சிகள் குழுக்கூட்டத்தின் போது வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் குறித்த சுற்றறிக்கைகள் மற்றும் சமமான ஏனைய நிறுவனங்களை விஞ்சி பதவியணியினருக்கு வழங்கப்படும் விடுமுறைகள், உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் பயன்படுத்தப்படுகின்ற நீர், மின்சாரம் என்பவற்றிற்காக கட்டணங்களை அறவிடாமை போன்ற வரப்பிரசாதங்கள் தொடர்பாக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், முழுச் சம்பளத்துடன் கல்வி விடுமுறை பெற்று கட்டாய சேவைக் காலப்பகுதியில் சேவை புரியாமல் சேவையிலிருந்து விலகிச் சென்றுள்ள 09 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 22,035,213 தொகையொன்று 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் இந்த உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து விலகிச் சென்று 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்ததுடன் 02 உத்தியோகத்தர்கள் மரணித்திருந்தமையும் பிணையாளர்களிடமிருந்து இத்தொகையை அறவிடுவது சந்தேகத்திற்கிடமாக இருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் பொழுது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் உள்ள குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) முற்பணக் கட்டுப்பாடு
(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) தொழிற்சாலை முகாமைத்துவம்